**DVC 16/2022**

**02.08.2025**

**previous Date : 12.10.2023**

**அருணா , க/பெ. பிரகாஷ்**

**<u>எதிரி மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது வேலை செய்யவில்லை. சிங்கப்பூரில் நான் என்ன செய்கிறேன் என்றால் எனது பெரியம்மா வீட்டில் இருக்கிறேன். எவ்வளவு நாட்களாக சிங்கப்பூரில் இருக்கிறேன் என்றால் இரண்டு வருடங்களாக இருக்கிறேன் ஊருக்கு வந்துவிட்டு செல்வேன். தொடர்ச்சியாக சிங்கப்பூரில் இல்லை. குழந்தை யார் வீட்டில் இருக்கிறது என்றால் எனது அம்மாவுடன் இருக்கிறது. எனது அம்மா என்ன வேலை செய்கிறார் என்றால் அரசு ஆசிரியராக வேலை செய்து வருகிறார். எனக்கும், 1ம் எதிர் மனுதாரருக்கும் இருவருக்குமே இரண்டாவது திருமணம் என்றால் சரிதான். நானும், 1ம் எதிர் மனுதாரரும் முதலில் பதிவு திருமணம் செய்து கொண்டோம் என்றால் குடும்பத்துடன் சேர்ந்து பதிவு திருமணம் செய்துகொண்டோம். பதிவு திருமணத்திற்கு 1ம் எதிர் மனுதாரரின் பெற்றோர் வந்திருந்தார்களா என்றால் ஆமாம். நங்கையாரும் வந்திருந்தார். 03.02.2016ம் தேதி பரமத்திவேலூரில் உள்ள வெங்கானு அம்மன் திருக்கோவிலில் எனக்கும், 1ம் எதிர் மனுதாரருக்கும் திருமண வரவேற்பு நடந்தது என்றால் சரிதான்.

2. அதற்கு பிறகு நானும், 1ம் எதிர் மனுதாரரும் தனிக்குடித்தனம் இருந்தோம் என்றால் முதலில் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். 2 மாதங்களுக்கு பிறகு தனிக்குடித்தனம் போனோம். அடுத்த ஆண்டு குழந்தை பிறந்ததா என்றால் தனிக்குடித்தனம் சென்ற பின்பு 2 மாதம் கழித்து கர்ப்பமானதால் எனது உடல் நிலை காரணமாக எனது அம்மா வீட்டிற்கு போன பின்பு குழந்தை பிறந்த பின்பு எனது கணவர் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தேன். குழந்தை பிறந்த பின்பு எவ்வளவு நாட்கள் கழித்து எனது கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றால் 3 மாதங்கள் கழித்து

வந்தேன். அதற்கு பிறகு எவ்வளவு நாள் கூட்டுக்குடும்பமாக இருந்தேன் என்றால் குழந்தைக்கு 1 வயது 8 மாதம் ஆகும் வரை கூட்டுக்குடும்பமாக இருந்தேன்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.08.02 18:07:27 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**